உ

ஸ்ரீகுருவேநமஃ.

நிஜானந்தவிலாசம்.

திருநெல்வேலிக்கோடகநல்லூர்

ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள்

அருளிச்செய்தது.

திருவனந்தபுரங்காலேஜில்

தர்க்கசாஸ்திரபண்டிதர்

B. A. சுந்தரம்பிள்ளையாலும்

திருநெல்வேலி

மாவடி. சிதம்பரர்பிள்ளையாலும்

திருநெல்வேலி

முத்தமிழாகரஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

October--1879.

PRICE 14 ANNAS.

சிவமயம்.

அறிவிப்பு.

இப்புஸ்தகங் கிரயம் அணா—14.

தேவையுள்ளவர்கள் திருநெல்வேலிபஜனைஸபை சிதம்பரம்பிள்ளையிடத்திலும், திருவனந்தபுரம் காலேஜில் தர்க்கசாஸ்திரபண்டிதர் B. A. சுந்தரம்பிள்ளையிடத்திலும், பங்கிக்கூலிசஹிதமநுப்பினால்பெற்றுக்கொள்ளலாம். இதுவுமன்றி இதன்கீழ்கண்டபுஸ்தகவிபரப்படி ஷை பஜனைஸபைசிதம்பரம்பிள்ளையிடத்திற்கு அதனதன் கிரயமும் பங்கிக்கூலியுமநுப்பினால் பெற்றுக்கொள்ளலாம்.

	Rs.	As
பெரியபுராணக்கீர்த்தனை	3	,,
பிரமகீதைமூலமும் உரையும்	3	,,
சுவாநுபவரஸமஞ்சரி	,,	12
சுவாநுபூதிரஸாயனம்	,,	8

உ

சிவமயம்.

ஸ்ரீ சுந்தரஸ்வாமிகள்

சரித்திரச்சுருக்கம்.

இஃது ஷை சுவாமிகளின் பிரதமசீடராகிய
திருநெல்வேலித்திம்மராஜபுரம்
பிச்சுசுவாமிகள் அருளிச்செய்தது.

இலங்குமாயிரத்தோடேழுதாமாண்டுக்கிசைந்திடுங்கரவருடத்தில், நலங்கொள்கார்த்திகைநன்மதியினிலநுடநாட்சனிவாரத்தில்விடையிற், கலங்கலில்பொருணைக்கோடகநல்லூர்க்காமர்பூசுரர்செய்மாதவத்தால், பொலங்கொளும்பரமசுந்தரகுருவாய்ப்புவிமிசையவதரித்தனனே. ... ... [க]

அவதரித்தறிவோங் கிடவளர்ந் துறவோராற்சிகைபூணூநூலணிந்து, பவமறமறையாகமமுணர்ந்தவற்றாட் பன்னியவணநடந்ததன்பின், றுவமையொப்பிறந்தசானகிமாதை யுளங்கொளநன்மணம்புரிந்து, சிவபரம்பொருளைச்சிந்தைவாய்மெய்யுஞ்செறிதரப்பூசனைசெயவே. ... ... [உ]

செய்யவப்பலத்தாற்றேசிகன்விசுவேசுரரிடஞானதீக்கையும்பெற், றையமற்றறிவாலிந்திரசாலமகி

லமென்றுணர்ந்துநற்றுறவாய், மெய்யறிவனந்தானந்தமேவிடுநாள்விசுவேசர்பூரணமடைய, கையிலாமலகக்கனியெனச்சோமசுந்தரன்கருணைநோக்கடைந்தே. ... ... [௩]

தேசுறுசகசநிட்டையிற்பொருந்தித்தீர்த்தங்கள் காசிபல்தலமும், பூசுரர்குழுவோடளவில் யாத்திரையிற்போக்கினன்சிற்சிலபொழுதை, வீசுறுசிறுகால்நெல்லையம்பதியில்விளங்குமாருத்திரமதனோ, டாசறுதீபவிலக்கமுமியற்றி யரன்பணிவிடையினுள்கழித்தான். ... ... [௪]

ஆனிலைந்தாடுமைநதிக்கடவுளாலயப்பதிட்டையுமாங்கே, ஞானிகள்வியக்கச்சாத்திரசாலை நலமுடனமைத்ததுமன்றி, நானிலத்துள்ளபதிகளிற் சிலதைநயம்பெறப்புதுக்கியுமிடையே, மோனிகடுதிக்கச்சாத்திரநான்கை மொழிந்தனன்சிலதினந்திகழ்ந்தே. ... ... [௫]

திகழுமாயிரத்தைம்பத்திநாலாண்டிற்செறிவெகுதானியவருடம், புகழுமற்பசியாருந்தெய்திமதிநாள்புகல்கிருட்டிணபக்கத்தசமி, நிகழ்மகம்பகன்மூன்றுடனிருபஃதாய்நேர்ந்தநாழிகையரிமளத்தில், துகளில்சீரடியார்சூழ்ந்தினிதிருப்பச் சுந்தரன்கலந்தனன்பரத்தே. ... ... (௬)

முற்றிற்று.

சிவமயம்.

பிரகரண அட்டவணை.

நம்பர்	பெயர்	பக்கம்.
க	அவஸ்தாத்திரயசோதனம்	க
உ	குணுதிக்கஜ்ஞ்ஞிய ஆரோபசூக்ஷமம்	கங
ங	பிரமேசஜீவஜகவிசேஷநிரூபணம்	ஙஉ
ச	மாயாலக்ஷணநிரூபணம்	சச
ரு	சத்தநுபவநிரூபணம்	ருஅ
சா	சித்தநுபவநிரூபணம்	எச
எ	ஆனந்தாநுபவநிரூபணம்	அச
அ	மநோநாசமார்க்கநிரூபணம்	,,
,,	க-வது தேகத்திரயாத்தியாசநிவிர்த்தி	க00
,,	உ-வது ஆவரணவிக்ஷேபநிவிர்த்தி	ககச
கூ	வேதாகமசம்பிரதாயநிரூபணம்	கசக
க0	மதசங்கேதநிரூபணம்	,,
,,	க-வது நியாயம்	கருஎ
,,	உ-வது வியாகரணம்	கசாக
,,	ங-வது பூர்வமீமாம்சை	களங
,,	ச-வது நிரீசுரசாங்கியம்	கஅச
,,	ரு-வது சேசுரசாங்கியம்	ககூஎ
,,	சா-வது பௌத்தமதம்	உகக
,,	எ-வது சகஜமதம்	உகஅ

கக	உபாஸ்திநிரூபணம்	,,
,,	க-வது நரஸிம்ஹோபாஸ்தி	உஉ௯
,,	உ-வது இராமச்சந்திர உபாஸ்தி	உ௩க
,,	௩-வது சுப்பிரமணியவுபாஸ்தி	உ௩எ
க௨	பிரணவாநுபூதிநிரூபணம்	,,
,,	க-வது ஞானமார்க்கம்	உ௪௪
,,	உ-வது யோகமார்க்கம்	உ௫௪
க௩	பஸ்பமகிமாநிரூபணம்.	உ௬௬

முற்றிற்று.

ஸ்ரீ சிவாயபரமகுருவேநம.

நிஜானந்தவிலாசம்.

பாயிரம்.

சொன்மதிசாராத் தூயநற்பொருளின்
துணைகழறுதிக்குமா துதித்து *
இன்மலமறைகளித்தமுந்தேடு
நிஜானந்தோகம்பதந்தனையென் *
புன்மொழித்தமிழாற் சாதகர்பொருட்டுப்
போதகஞ்செயப்புகுதலைப்பார்த் *
தென்மதியென்னைநகைசெயப்பின்று
மியம்புவானெழுந்ததோரவாவே. *

முதலாவது.

அவஸ்தாத்திரய சோதன சம்பிரதாயப் பிரகரணம்.

சர்வஞ்ஞ கருணைமூர்த்தியாயும் பரமகுருவாயும் விளங்குகின்ற என்பிராணநாதனே! நான் பரகதியடையுமார்க்கத்தை லளிதமாய் மனதுக்குவரு

ம்படி யுபதேசித்தருள வேண்டுமென்று மாணாக்க
ன் பிரார்த்திக்க:

ஆசிரியர் ஜீவன் தேகேந்திரிய அந்தக்கரணா
ங்களையும்அவற்றினவஸ்தாத்திரயங்களையும்இவற்றி
ற்பிரதிவிம்பித்தசைதந்நியத்தையும் இவற்றினதிஷ்
டானமானஅசங்கவுதாசீனநித்தியசுத்தபுத்தமுத்த
பரிபூரணகூடஸ்தபிரமசைதந்நியத்தையும்,விவேக
மின்மையால்சுயம்வெண்மையானபடிகத்தைஜபா
குசுமசந்நிதிவசத்தா லிரத்தஸ்படிகமெனக்காண்ப
துபோல,நானெனதுஎன்றத்தியாசித்துவிபரீதமா
ய்க்காணுதலைநீக்கிஉள்ளபடிபரமான்மாவான தன்
னைத்தரிசித்தால்அஃதேபரகதியாகுமென அருள:

மாணாக்கன்—சுவாமி! வெண்மையான ஒருவ
ஸ்திரத்தில் நிஜமாகக் கருப்புமுதலிய குணபேத
மான அழுக்குப் பற்றினால், அதனை மற்றொரு கிரி
யாதந்திரத்தா லெடுத்து மாற்றலாம். படிகத்தி லி
ல்லாமற் றோன்றி யபேதமாய்க் கலந்துநின்ற இ
ரத்தவன்னம் போல, சேதிக்கத் தகாமலிருப்ப
தை, யெங்ஙனம் பிரிக்கலாமென:

ஆசிரியர்—அங்ஙன மில்லாமற் போனாலும்,
தேகேந்திரிய அந்தக்கரண சிதாபாச கூடஸ்த ப
ரமான்மா முதலியவற்றின் விவேகாநுபூதியாற் பி
ரித்தெடுக்கலாமென்றருள:

மாணாக்கன்—அவ்விவேகாநுபூதி யெத்தன்மையதெனை:

தேகம் இந்திரியம் அந்தக்கரணம் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி, இவற்றின் விஷயமான பாவாபாவ ரூபமாகிய ஜகம்அனைத்தும் ஜடமாகும். அவற்றைப் பிரகாசிப்பிக்குஞ் சித்து சிதாபாசனாகும். அதற்கும் அதிஷ்டானமாயிருக்குஞ் சித்து கூடஸ்த நித்திய போதஞானபரமான்மா வாகும். அவற்றைப் பிரித்தெடுக்கக் கூடாமற் கலந்து தோன்றுகின்ற அத்தத்துவங்களைப் பிரித்துக் காணும் விபரம்—

சாக்கிரத்திற் பிரித்துக் காட்டுதல்.

உலர்ந்த வொருசாம்பற்றிரளையில் திவலைஜலசம்பந்தம்வர, அப்போது அத்திரளையில் எங்ஙனம் ஜலவியாபகங் காணப்படுகின்றதோ; அப்படியே, ஞானேந்திரிய கர்மேந்திரியங்களையுடைய இத்தூலதேகஞ் சாக்கிராவஸ்தையிற் பாவாபாவரூபமான கடபடாதி ஜகத்தோற்றத்தை முன்னிட்டுக் காணப்படுங்கால், நிவாததீபம்போல கரணகருவிகளை விக்ஷேபித்தல் செய்யாமனிறுத்தி, சிவபெருமானது கருணைபொருந்திய பரமகுருவின் பிரசாதமுடைய விவேகாநுபூதியாற் பார்க்கில், சப்ததாதுக்களின் கூட்டமான தேகம், இருவகையு

டைய இந்திரியம், அவற்றின் விஷயங்களான ஜகம், இவற்றை யந்தந்த நாமரூபங்களோடும் பின்ன பின்னமாகத் தோன்றுவித்து, அவற்றை யுள்ளும் வெளியும் வியாபித்துப் பிரகாசிப்பிக்கின்ற தன்னை ஆன்மாவாயும், அவற்றைத் திருசியமான அனான்மாவாயும், அநுபவிக்கப்படும்.

ஜலசம்பந்தமுடைய சம்புடத்தினை யுலர்த்திடில், அதில் ஜலசுபாவங் காணப்படாமல் ஜலவியாபகமின்மை யநுபவிக்கப்பட, அத்தினைக்கும் ஜலத்துக்கும் எப்படிப் பேதங் கிரகிக்கப்படுகின்றதோ; அப்படியே, ஸ்தூலதேகத்தைச் சாக்கிரதி விகாரத்தி லிருந்து நீங்கி யவ்வான்மாவைத் தனித்து சொப்பனதேகத்தை யடையுங்கால், இது ஸ்தூலதேகம், இது இதனையுடைய இந்திரியம், இதுபாஸ்யபாவ ரூபமான கடபடாதியான ஜகமெனும் ஞானம், என்று இவற்றைக் கண்டநுபவிக்குத் தேகாதிகளுக்கு ஆன்மாவைத் தனியாய் வேறாய்ப் பிரித்தநுபவிக்கப்படும்.

சொப்பனத்திற் பிரித்துக் காட்டுதல்.

சொப்பனவவஸ்தையில் ஸ்தூலசரீரத்தி லிருந்து அவ்வான்மாவைத் தனியம் பிரகாசிக்கும் போதும், அப்படியே தன்றற் கற்பிக்கப்பட்ட தனது தேகமுதலிய சகல ஜகத்தையும் வியாபித்துப் பிரகாசி

க்கும்போதும், மேகமண்டலம் நக்ஷத்திரமண்டலம் சந்திரமண்டலம் இவற்றை வியாபித்துப் பிரகாசிப்பிக்குஞ் சந்திரசோதி, சிறிது பெரிது வட்டம் முதலியவாகிருதி பொருந்திய அம்மேகாதிகளுக்கு அந்நியமா யெப்படி யநுபவிக்கப் படுகின்றதோ; அப்படியே, சொப்பனத்திற் கண்ட தனது தேகமுதலிய சகலஜகமுந் தனதான்மசைதந்நிய வியாபகத்திற் றிருசியமாய்க் காணப்படுவதால், அவற்றை யநான்மா வெனவும், அவற்றை வியாபித்துக்கண்ட தன்னை யநான்மவிலக்ஷண சொப்பனதிருஷ்டாவான ஆன்மா வெனவும், விவேகத்தா னிதானித்துப் பார்க்க, அங்ஙனமே யநுபூதிக்கு வரும்.

அன்றியும், இவ்வான்மசைதந்நிய வியாபகம் அவித்தையெனுஞ் சுழுத்தியாங் காரணசரீரத்தை யடையுங்கால், முற்கூறிய சூக்குமசரீரமும், அதன் விஷயத்திற்கண்ட சொப்பனப்பிரபஞ்சமும் இவ்வான்மசைதந்நியவியாபகத்தைநீங்கினதுபற்றிதங்களையுள்ளபடி ஜடங்களாகக்குறித்துக் காணும்படி பவித்திடும். அதனாலும் அவற்றிற்கு ஆன்மா அந்நியனாகவநுபவிக்கவரலாம்.

சுழுத்தியிற்பிரித்துக்காட்டுதல்.

சுழுத்தியில் அவித்தையாங் காரணசரீரத்தை யான்மசைதந்நிய வியாபகம் அடைந்தகாலத்தில், தான் அந்நியம் என்ற பேதக்குறிப்பு நீங்கி, அபேத

மாயுங் குறித்ததாகக் காணப்படாமல் சூநியம்போல விளங்கிநிற்கும். அந்நிசையினும், அவனது பகுதியைக் கண்டநுபவிக்க வேண்டுமென்றருள:

மாணாக்கன்—சாக்கிரஞ் சொப்பனம் இரண்டவஸ்தைகளிலும், ஸ்தூலசூக்குமமென்ற இரண்டு சரீரங்களோடு சகலஜகமுந்திருசியமாகக் காணப்பட்டதுபற்றி, இஃதான்மவஸ்து இஃதனான்மவஸ்து, வென்று விவேகித்தறியக் கூடும். சுழுத்திநிசையில் திருசியம் திருஷ்டுரு தரிசனம் என்ற பேதமநுபவிக்கப்படாததினால், எங்ஙனம் ஆன்மாநான்மவிவேகாநுபூதி கூடலாமென:

ஆசிரியர்—திருஷ்டியிற் காணப்பட்டவொரு இரச்சுவை, இஃதென்று சாமாநியஞானத்தாற் குறிக்குங்கால், அதற்கு வேறாகிக் கற்பனையாற் றோன்றிய சர்ப்பம் புத்தியின் வழியாயநுபவிக்கப்பட, அந்நிசையின் மிகுந்த பயமுடையவனாகி அப்பழுதையின்மீது விழுந்து மூர்ச்சையடைய, அப்பொழுது கண்வழியே பழுதையைப்பற்றிப் புத்தியிலுதித்த இஃதென்ற சாமாநியஞானமும், பிராந்தியால் இரச்சுவிற் கற்பிக்கப்பட்டுப் புத்தியின் வழியாய்ச் சர்ப்பமாகப் பிரகாசியாநின்ற சர்ப்பஞ்ஞானமும், ஐக்கியப்பட்டு, அந்நிசையிற் சூநியம்போலப் பகுதிவிவேகத்துக் கிடமின்றி யிருந்தபோதிலும், மூர்

ச்சைதெளியுங்கால், இஃது சர்ப்பம் என்ற இரண்
டு ஞானமும் பிரத்தியக்ஷத்தை முன்னிட்டுப் புத்தி
யின்வழியா யிரச்சுவின் முன்போலுதிப்பதால், உ
தித்ததிசையைக் கொண்டுவிவேகித்திடிற், பேதத்
தோற்றமற்ற மூர்ச்சைக்கு முன்னும் பின்னுமாகவு
தித்த இவ்விரண்டுஞானத்தி, லிஃதென்ற ஞானநு
பவம்வஸ்துதந்திரமான பழுதையைப்பற்றியவிவே
கஞானமெனவும், சர்ப்பஞ்ஞானங் கர்த்திருதந்திர
மான ஆரோபித சர்ப்பவிஷய விவேகஞானமென
வும், விவேகாநுபூதி யுண்டாகுமாறுபோல்; சுழுத்
தியிற் காரணசரீரத்தோடு மைக்கியப்பட்டுப், பே
தாபேதத்தோற்றமின்றி சூநியம்போற் காணப்பட்
ட ஞானசொரூபமான ஆன்மவியாபகம், விழிக்குங்
கால் நான் ஒன்றுந்தெரியாமற் சுகமாய்த்தூங்கி
னேனென்றவநுபவமென்ன, அவ்வான்மா சுழுத்தி
யிலிருக்குங்கால் அந்நியரூற் சிலசொற்கள்கொண்
டு விழிக்குந்தன்மையென்ன, இவற்றைச் சோதிக்
கின், அத்திசையைப்பற்றிய ஆன்மவிவேக முதித்
திடலாம். அஃதாவது—தூங்குமவதரத்தில், சில
சொற்கள் கேட்கப்படாமலுஞ், சிலசொற்கள் கே
ட்கப்படவும், அப்பொழுது கரணகருவிகளை நீங்கி
ச்சூநியம்போன்றிருந்த அவ்வான்மவியாபகம், யா
தொரு கற்பனையையு முன்னிடாமற் றெளிவாயு

திக்கப், பின்பு மற்றொரு சொல்லால் அதின்பொ ருளுடைய கற்பனையோடுங்கூடிட, அந்நிலையை விவேகத்தாலநுபவித்துப் பார்க்கின், சூநியத்தா ற் தன்னை யசத்துப்போற் கொண்ட குறிப்பும் சூ நியத்துக்கு வேருகிக் கற்பனையை யெதிரிடாமற் சில சப்தவிசேஷங்களாற் கரணகருவிகளின் சம் பந்தமின்றி சாமாநியமா யுள்ளத்தில் விழித்தல் மாத்திரமாயுதித்துப் பிரகாசித்தலின் குறிப்பும் பின்பு சில சப்தங்களாலுண்டாகிய அதன் பொரு ளான கற்பனையோடுங் கூடிப்பிரகாசித்தலின் குறி ப்பும், நிதாநமாய் விவேகத்துட னநுபவித்துப்பா ர்க்கில் சூநியம்போன்ற வசத்துத்தன்மை யென்ன சாமாநியமாய் விழித்தலின் குறிப்பென்ன, கற்ப னையோடுங் கூடிப்பிரகாசித்தலென்ன, இவற்றிற் கும் இவற்றை திருசியமான வஸ்துக்கள் கப் பிரகாசிப்பிக்கின்ற திருஷ்டாவாகிய ஞான சொரூபமான தனக்கும் பருதிஞ் ணடாகலா மென்பதே.

ஆதலால், ஆகாசத்தி லோரிடத்திற் பதிவாயி ருக்கின்ற சந்திரமண்டலந் திருஷ்டியின் கலக்கத்தாற் பார்க்கப்படுங்கால், அவ்விடத்திற் சந்தி ரமண்டல மிலதுபோலும், ... விரண்டு மண்டலமாக வுதித்துப் பிரகாசிப்பது

போலும், அவற்றினுந் திருஷ்டியின் சலநபேதத்
தா லொருமண்டலங் கண்டுங் காணாததாயும், மற்
றொரு மண்டல நன்றாக வட்டம்பொருந்திப் பிர
காசிப்பதாய்க் காணப்படுமளவில், அவனது ஸ்தா
னத்தி லவனதுரூபமும், மற்றோரிடத்தின் மண்ட
லத்தின் குறிப்பின்றி யவனதுதிப்பும், வேறோரிட
த்தின் மண்டலம்பொருந்திய விசேஷமானவவன
துதிப்பும், ஒருதிருஷ்டியிற் காணப்படுவதுபோல;
கரணகருவிகளோய்ந்து ஆன்மாமாத்திரமாகச்சே
ஷித்தவிடத்திற், சூனியம்போன்ற அவனதின்மைத்
தோற்றமும், அதற்குப் பேதமாகி விசேஷமின்றி
விழித்தல்மாத்திரமான சாமானியவுதிப்பும் சங்கற்
பத்தோடுங் கூடிய விசேஷமானவுதிப்பும், எந்த
ஆன்மசைதந்நியவியாபகத்திற் பேதித்துக் காண
ப்படுகின்றதோ; அந்த ஆன்மசைதந்நியவியாபகத்
தை வேறாகக்கண்டு, அதனை வஸ்துதந்திரமான
அகம்பதார்த்தமாக நிர்ணயமாயநுபவித்து, அவ
னுக்குத் திருசியமாகத்தோன்றிய சூநிய சாமாநிய
விசேஷக்குறிப்புகளைக் கர்த்திருதந்திரமான கற்பி
தவஸ்தையாயுந் தெளிந்து, அக்கற்பிதங்களும் பே
தமாயநுபவிக்கப்பட்டும், வி[illegible]த்தால் வாதிக்க
ப்பட்டும், இ[illegible]ந்துந் [illegible]திஷ்டானத்து
க்கு வேறுபா[illegible]ந்து, இரச்சுவிற்றோ

ன்றிய சர்ப்பத்தை இரச்சுசத்தையால் வியாபிக்க, அச்சத்தையாற் சர்ப்பசத்தை முக்காலத்திலும் வேறுயில்லாமனீங்கி, இரச்சுவின் வியாபகவிருக்குகை மாத்திரமாய்ப் பிரகாசிப்பது போல; ஞானரூபமான ஆன்மாவின் சத்தையால் இச்சூநியஞ்சாமாநியஞ் சங்கற்பமான விசேஷம், அப்படியேசொப்பனஜகம் ஸ்தூலதேகத்துடன்கூடிய சாக்கிரப்பிரபஞ்சம் இவற்றை வியாபிக்கச் சாதனமான கருவிகரணங்கள் இவ்வனைத்தையு மநுபவித்தபடி நினைப்பா லொருகாலத்தி லெதிரிடில், அக்காலத்தில் ஆதியந்தமற்ற ஆன்மப்பிரகாச சமுத்திரத்தில் நாமரூபங்களான அலை குமிழி நுரை முதலான விப்பிரபஞ்சமனைத்து மிதப்பதாக வநுபவத்துக்கு வரும். ஆதலால், காற்றேய்ந்த வியாபகசமுத்திரத்தி லுதித்த அலை நுரை குமிழிகள் அந்தந்த விடத்தில் ஜலமாத்திரமா யடங்கி வியாபகசமுத்திரமாய்க் காணுவது போல; அநேக நாமரூப விசித்திரங்களான திருசியபேதமுடைய அநேக பிரமாண்ட மண்டலங்களாகத்தோன்றிய ஸ்தூல சூக்கும காரணங்களென்னும் ஜடப்பிரபஞ்சங்கள், வாசனையென்னுங் கற்பனையாஞ் சலனவாயு வடங்க, அவ தத்தமிடத்திற்றனே ஆதார விருத்திஞான முத்திரமாத்திரமா யடங்கிக்காணும்.

அவ்வித விருத்திசமுத்திரத்தை யுற்றுப்பார்க்குங்கால், ஆதிமத்தியாந்த சூநியமாய், ஸ்தூல சூக்கும காரணாதிபேதமின்றி ஏகாகாரமாய், ஞானானந்தகனமா யநுபவத்துக்கு வரும். அவ்வநுபவமுங் கரதலாமலகம்போற் றனது ஞானப்பிரகாசத்திற் றிருசியமாய்க் கிரகிக்கப்படுவதனாலும், திருசியமனைத்தும் அனான்மா வானதினாலும், அதை யகம்பதார்த்த மன்றெனவும், அதனை வியாபித்துப்பிரகாசிக்கின்ற சொரூபஞானவன்னியில் திருசியமான விருத்திக்குசுமம் உதிக்கக்காரணமில்லையெனவு நிஷேதித்திட, அதுவுமதிஷ்டான ஆன்மசொரூபமானமாத்திரமாய் நீங்கிவிடும். இவ்வான்மசுபாவத்தை யகங்காரவிருத்திசம்பந்தமின்றித் தானாகப் பிரகாசிக்கிறபடி யநுபவிப்பாயாக வென்றுபதேசித்தருள:

மாணாக்கன்—அப்படியே ஸ்தூலசூக்குமகாரணங்களாகத்தோன்றிய பிரமாண்டமண்டலங்களைத், தன்னநுபவத்திற்கண்டபடி, பகிரிந்திரியங்களால் வியாபிக்கப்பட்டபொருள்களைப், பகிரிந்திரியவியாபாரோபயோகியான விஷயாதார அகண்டவிருத்தியினும், அந்தரேந்திரியங்களால் வியாபித்துப்பிரகாசிக்கப்பட்ட சூக்குமப்பிரபஞ்சங்களை, சூக்குமவிஷயக்கிரகண வுபயோகியான விஷயாதார

ன்றிய சர்ப்பத்தை இரச்சுசத்தையால் வியாபிக்க,
அச்சத்தையாற் சர்ப்பசத்தை முக்காலத்திலும்
வேறுயில்லாமனீங்கி, இரச்சுவின் வியாபகவிருக்
குகை மாத்திரமாய்ப் பிரகாசிப்பது போல; ஞான
ரூபமான ஆன்மாவின் சத்தையால் இச்சூனியஞ்சா
மானியஞ் சங்கற்பமான விசேஷம், அப்படியேசொ
ப்பனஜகம் ஸ்தூலதேகத்துடன்கூடிய சாக்கிரப்பி
ரபஞ்சம் இவற்றை வியாபிக்கச் சாதனமான கரு
விகரணங்கள் இவ்வனைத்தையு மநுபவித்தபடி நி
னைப்பா லொருகாலத்தி லெதிரிடில், அக்காலத்தி
ல் ஆதிபந்தமற்ற ஆன்மப்பிரகாச சமுத்திரத்தில்
நாமரூபங்களான அலை குமிழி நுரை முதலான வி
ப்பிரபஞ்சமனைத்து மிதப்பதாக வநுபவத்துக்கு வ
ரும். ஆதலால், காற்றேய்ந்த வியாபகசமுத்திரத்
திலுதித்த அலை நுரை குமிழிகள் அந்தந்த விடத்
தில் ஜலமாத்திரமா யடங்கி வியாபகசமுத்திரமா
யக் காணுவது போல; அநேக நாமரூப விசித்திர
ங்களான திருசியபேதமுடைய அநேக பிரமாண்
ட மண்டலங்களாகத்தோன்றிய ஸ்தூல சூக்கும
காரணங்களென்னும் ஜடப்பிரபஞ்சங்கள், வாச
னையென்னுங் கற்பனையாஞ் சலநவாயு வடங்க, அ
வை தத்தமிடத்திற்றோன ஆதார விருத்திஞான
சமுத்திரமாத்திரமா யடங்கிக்காணும்.

அவ்வித விருத்திசமுத்திரத்தை யுற்றுப்பார்க்குங்கால், ஆதிமத்தியாந்த சூநியமாய், ஸ்தூல சூக்கும காரணாதிபேதமின்றி ஏகாகாரமாய், ஞானானந்தகனமா யநுபவத்துக்கு வரும். அவ்வநுபவமுங் கரதலாமலகம்போற் றனது ஞானப்பிரகாசத்திற் றிருசியமாய்க் கிரகிக்கப்படுவதனாலும், திருசியமனைத்தும் அநான்மா வானதினாலும், அதை யகம்பதார்த்த மன்றெனவும், அதனை வியாபித்துப்பிரகாசிக்கின்ற சொரூபஞானவன்னியில் திருசியமானவிருத்திக்குசுமம் உதிக்கக்காரணமில்லையெனவு நிஷேதித்திட, அதுவுமதிஷ்டான ஆன்மசொரூபபானமாத்திரமாய் நீங்கிவிடும். இவ்வான்மசுபாவத்தை யகங்காரவிருத்திசம்பந்தமின்றித் தானாகப் பிரகாசிக்கிறபடி யநுபவிப்பாயாக வென்றுபதேசித்தருள:

மாணாக்கன்—அப்படியே ஸ்தூலசூக்குமகாரணங்களாகத்தோன்றிய பிரமாண்டமண்டலங்களைத், தன்னநுபவத்திற்கண்டபடி, பகிரிந்திரியங்களால் வியாபிக்கப்பட்டபொருள்களைப், பகிரிந்திரிய வியாபாரோபயோகியான விஷயாதார அகண்டவிருத்தியினும், அந்தரேந்திரியங்களால் வியாபித்துப்பிரகாசிக்கப்பட்ட சூக்குமப்பிரபஞ்சங்களை, சூக்குமவிஷயக்கிரகண வுபயோகியான விஷயாதார

வதுபோல, ஒன்றுந்தெரியாமற் றூங்கினேனென்ற ஞானம், விசேஷஞானமாயிருந்திடினும், அப்பிரமாணஞானமநுபவமாகுமென்றுபதேசித்தார்.

மாணாக்கன் அஃதெங்ஙனமென:

ஜன்மாந்திரத்திற் சூத்திரனாயிருந்தவன் மற்றொரு ஜன்மத்திற் பிராமணனாயிருக்குங்கால், பிசாயஞ்ஞோபவீதமுடையதனது தேகத்தைக்கண்டு, அதைமறந்து, தன்னைப் பிராமணனாக நிர்ணயமாய்க்கொள்வதுபோல்; சாக்கிராவஸ்தையில் இருந்த மூத்திரமாம்சாதிகளாலுண்டாகிய ஸ்தூலசரீரத்தை நானெனக்கண்ட திசைநீங்கிச், சொப்பனவஸ்தையை யடைய, மனோமாத்திரத்தாற் கற்பிக்கப்பட்ட நானெனும் விந்துவில், வாசனையாற்றோன்றிய சரீரங்காணப்பட, அதனையே நானென அநுபவிக்க, பின்பு அத்திசைநீங்கிச் சுழுத்தியை யடைய, அவ்விடத்து இந்திரியவாசனை மனோவாசனை யிரண்டும் அகங்காரமாம் விந்துவை நீங்கிவிட்டதால், ஸ்தூலசூக்குமக் குறிப்பாம் விசேஷமின்மையுங், கரணத்தினுதவியின்மையால் அவித்தியாந்தகாரத்தால் விழுங்கப்பட்டு க்ஷணமாத்திரத்தி லதுவும் லயிக்க, இந்தனமில்லாத அக்கினிகளைம்போல, அகங்காரப் பிரதிவிம்பித ஜீவஞ்ஞானமுந், தனதுவிம்பமான கூடஸ்த சைதந்நியத்தில்

அதுமாத்திரமாயடங்கிநின்று, பின்பு கர்மவாசனை வசத்தால் நிராகாரமாகிய விருத்தியுதிக்க, அதிற் கூடஸ்தன் சிவரூபப்பிரதிவிம்பமாகத்தோன்ற, அவ்விருத்தியிற் பிரதிவிம்பப்பிரகாசத்தால் அவ்வகங்காரமெனும் விந்து பூர்வம்போல் அகமெனப்பிரதிபலிக்க, அவ்வகங்காரவிருத்தியில் நிராகாரவிருத்தியின்கண் முன்பிரதிவிம்பித்த சைதந்நியமே பிரதிவிம்பிக்க, அவ்வான்மப்பிரகாசத்தையுடைய அகங்காரமும், அக்கணத்திற் றனக்கு விஷயக்கிரகண சாமக்கிரியையாயுள்ள தேகேந்திரியாதிகளின் வாசனை தன்னிடத்தி லுதியாததுகொண்டு, அகமகமெனத் தான்பிரகாசித்தும், அவ்விடத்து நிர்விகார சவிசேஷ கூடஸ்தனாகிய தனது விம்பசைதந்நியந் தனக்காசிரயமாய் விளங்கிக்கொண்டிருந்தும், விவேகமின்மையால் அதனையும், இவ்வகங்காரவிருத்திக்குச் சாக்ஷியாய்க் குறித்தறியச் சாமர்த்தியமற்று, இவ்வகங்காரவிருத்தியிற் பிரதிவிம்பித்துப் பிரகாசிக்கின்ற தன்னையும், அகங்காரவிருத்திக்குச் சித்ஜடவிவேக மில்லாததால், இஃதகங்காரம் தானகங்காரி யெனவுமறிய வல்லமையற்று, நிர்விஷயமாய்நிற்க நிர்விருத்திக நிராகார கூடஸ்தசைதந்நிய மென்னை நிராகார சுத்தசத்துவ விருத்திப்பிரதிவிம்பித சவிசேஷ கூடஸ்தசைதந்நிய மெ

ன்ன, அகங்காரவிருத்திப் பிரதிவிம்பித வகங்கார சைதந்நியமென்ன, இம்மூன்றும் அகங்காரவிருத்தியில் விஷயவாசனை யுதியாததனால், நிர்விஷயமா யகங்காரமிருந்து மிலதுபோ லிஃதென்று நிர்ணயிக்கக் கூடாததனால், நிராலம்பமாய் வாடிமயங்க, அக்காலத்திற் றன்னுள்ளடங்கிய தமோகுணமும், அவ்வகங்காரவிருத்தியிற் பிரகாசித்திருக்கின்ற அகங்காரசைதந்நியத்தையும், அதற்கு விம்பஸ்தானமா யிருக்கின்ற கூடஸ்தசைதந்நியத்தையும், ஞானமாகக் கொள்ளாதிருக்கும்படி லயரூபமாயிருந்து மயக்க, அந்நிசையில் லயரூபமான தமோகுணத்தா லுண்டாகிய அகங்காரத்தின் கோரமான மயக்கை, அகங்காரத்திற் பிரதிவிம்பித்த அகங்காரசைதந்நியமு மடைந்ததுபோற் பவித்துப் பிரகாசிக்க, அவ்வகங்காரவிருத்தியி லுள்ளடங்கிய ரஜோகுணம் தனது சக்தியால் அதிசூக்குமமாகிய வாசனாரூபமான ஸ்தூல சூக்குமகருவிகரணங்களென்ன, அவற்றின் விஷயங்களென்ன, அவற்றின் ஸ்பூர்த்தியைப் பிரஞ்ஞாமாத்திரமா யுதிப்பித்திட, அக்கணத்தி லவ்வகங்காரவிருத்தியி லுள்ளடங்கிய சத்துவகுணம், அகங்காரவிருத்திக்கு விக்ஷேப லேசமேனு மில்லாததினால், ரஜோகுணத்தாற் றோற்றிய அதிசூக்குமங்களான அவ்விஷயங்களை அதி

சூக்ஷுமமாகக் காட்டி, அவற்றையே அஃது அவலம்பனமாக அபிமானித்து நிற்கச்செய்ய அவ்வநுபூதியில் அவ்வித அவலம்பனமுடைய அகங்காரம், அச்சத்துவகுணத்தி னுதவியால், அதிசூக்ஷுமமாய் வாசனாரூப போக போக்கிய போகதுரு வென்னுந் திரிபுடியைக் கொடுக்காநின்ற கருவிகரணங்களோடுங் கூடி, அதினின்றும் முந்தின அநுபவத்தையும், வர்த்தமானத்தி னநுபவத்தையும், பேதமாகக் கண்டு, இவ்வர்த்தமானநுபவத்தின் வேற்றுமையின்மையே,பூதகாலாநுபவத்தில் ஞானத்தினின்மையாகக் கற்பிக்கப்பட்டு, அக்கற்பனையாற் கூடஸ்த பரமான்ம சைதந்நியமாகிய தனததிஷ்டான சைதந்நியமே, ஒருதானுவே சோரனைகத் தோன்றுவது போல, அஞ்ஞானமாகத் தோன்ற, அப்படியே தனது சொரூபஞ் சகஜமாக மறைபட்டு, ஸ்தூல சூக்ஷும வுபாதிகளில் ஆன்மபுத்தி தடித்து, அந்த அனான்ம வஸ்துவிற் றடித்த ஆன்மபுத்தியாற், சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி யென்னும் மூன்றவஸ்தைகளிலும், ஆவரணம் விக்ஷேப மென்ற இரண்டு சக்திகளாற், சொரூபஞானப் பிரகாசக விவேகஞ்ஞான மின்றி, பிராந்தன் போற் சுழலுகிறான்.

இதனை விவேகித்துச் சோதித்து நீக்கும் விப

ரம்- ஸ்தூலவியாபக அகந்தையை ஸ்தூலத்துக்கு வேறாகவும், அப்படியே ஸ்தூலத்துக்கு வேறாயும் சூக்குமத்தை வியாபித்ததாயுமிருக்கின்ற அவ்வகந்தையையே சூக்குமத்துக்கு வேறாக்கி, அதனையே அச்சூக்குமத்துக்குக் காரணமாகவும் ஸ்தூல சூக்கும பீஜமாகிய அக்காரணத்தை வியாபித்த அகந்தையை அக்காரணத்துக்கு வேறாகவும், அகம்பதார்த்த மெனவுங் காணவேண்டும் அங்ஙனங்காணில், அவ்வாவரண விக்ஷேபசக்திகளும், அவற்றாற் றோன்றிய மூன்றவஸ்தைகளுந், தனக்கு வேறாகத் தோன்றி, அநான்ம வஸ்துக்களாக நிஷேதிக்கப்படும். ச்ரோத்திரத்தினால் ரூபங் காணப்படாததுபோல், ஆவரண விக்ஷேபங்களைநீங்கிய ஆன்மதிருஷ்டி மாத்திரமாக நிற்க, முற்கூறிய அநான்மவஸ்துக்கள் தோற்றமற்ற நிராதாரமாக நசித்திடும். அக்காலத்திற் றுவைதவஸ்து வில்லாததால், அகம்பதார்த்த மாத்திரமாக வநுபவத்துக்குவரும்.

அவ்வநுபூதியில், ஸ்தூல சூக்கும காரணமாகிய சகல பிரபஞ்சமும், கூடஸ்தபரமான்ம ஜீவரூபசைதந்நியமும், வியாபகசைதந்நியமாத்திரமாக, ஜல புத்புத தரங்காதிகளுடன் கூடிய வொரு விஸ்தாரம்பொருந்திய தடாகத்தில், சகஜமாகவே யிடைவிடாம னிறைந்த வியாபகாகாய மனைத்துமாக

ணினுந், தடாகத்திற் பிரதிவிம்பித்த ஆகாயம் பார்க்கப்படுங்கால், ஜலவிகாரமான பேன புகபுக தரங்காதிகளும், அதற்காதாரமாகிய ஜலமும், விம்பாகாயத்தை மறைக்கும் வல்லமையற்று, அநுபூதியிற் காணப்படாமற், பிரதிவிம்பாகாயசத்தையைத் தனக்கு வேறாகக் காட்டாமல், விம்பாகாயசத்தையே, யெங்ஙன மநுபவிக்கப்படுகிறதோ; அங்ஙனமே யநுபவிக்கப்படுவதுதான். இங்ஙன மநுபவமவரில், அத்தியாசத்தின் விவரமும், சுழுத்தியி லான்மாஞான்ம விவேழுதிக்கும் வகையும், லளிதமாய்த்தெரியலாகு மென்றாசிரிய ரருள:

மாணாக்கன்—அகந்தை மூன்றுபாதிகளை வியாபித்த தன்மையையும், அதனை அவற்றிற் கப்புறப் படுத்தும் வகையையும், விவரமாய் விஸ்தரித்துத் தெரிய வுபதேசித்தருள வேண்டுமென:

ஆசிரியர்—சுழுத்தியினின்றுமுதித்த வகந்தை, தனது சத்துவம் ரஜசு தமசு என்னு மூன்று குணங்களில், தமோகுணத்தா லகம்பொருளை யஞ்ஞானமாகக் கொண்டு, ரஜோகுணத்தாலதிசூக்குமமான வாசனாமயங்களான கருவி கரணங்களைக் கற்பித்துச், சத்துவகுணத்தால் அவற்றை யவலம்பித்து, அவ்வவலம்பப்படி யதிற் பிரதிபலித்த வகங்காரி முதைதங்கியமும், அங்ஙனமே பிரகாசித்ததென, மு

ன்னமே நிரூபிக்கப்பட்டிருக்கிறதை, யின்னும் விசாரிப்பிக்கின்றோம். அஃதாவது—தமோகுண மென்பது, தன்னிற் பிரதிவிம்பித்த சைதந்நியத்தைத் தெளிவாகக் காட்டாமல், மறைந்ததுபோலக் காண்பிக்கும் வல்லமையுடையது. ரஜோகுணந் தன்னிற் பிரதிவிம்பத்தசைதந்நியத்தை மறையாமலும், சைதந்நியமாகக் காட்டாமலும், நாமரூபங்களாகத்தோன்றுவித்துப், பிரகாசிப்பிக்கும். சத்துவகுணம், முந்தின விரண்டு குணங்களுக்கு முட்பட்டுப் போனதால், நாமரூப விஷயாகாரப் பிரதிபலனங்களையும் ஜடம் போன்ற தமப்பிரதிபலனத்தையும், அகம்விருத்தியிற் பிரதிபலித்த சைதந்நியத்துக்குத், தன்னிற் பிரதிபலித்த சைதந்நிய சத்தாபெலத்தால், வெவ்வேறாக நன்றாய்க்காண்பித்து, அப்படியே பிரகாசிப்பிக்கும். அகந்தை, சத்துவத்தின் பெலத்தாற் றன்னிற் பிரதிவிம்பித்த சைதந்நியப்பிரகாசங்கொண்டு, அவற்றை வெவ்வேறாய்க் காணினுந், தனது சுபாவமான சொந்தத்தன்மை யென்னுந் தாதான்மிய சம்பந்தத்தால், அவற்றிற் றதான்மியப்பட்டு நிற்கும்.

இம்மூன்றுகுணங்களாற் கற்பிக்கப்படும் விஷயங்களையும், அவற்றை யகந்தை தாதான்மியப்படுமியல்பையுங் கூறுவாம். மூன்று மவஸ்தைகளின்

றும் அகந்தையுதிக்க; அதிற் பிரதிவிம்பித்த சைத ந்நியப்பிரகாசத்தால், தன்னுள் ளடங்கிய சத்துவ குணத்தின் பெலத்தால், அகந்தைக்கு வர்த்தமான த்தி லகமர்த்தஞானமும், பூதகாலத்தி லகமர்த்த ஞானாபாவமும், அஃதே யஞ்ஞானமுமாகப் பேதி த்துக் காணப்படும். அங்ஙனந் தனது ஸ்பூர்த்திக்கு ப் பேதமாகச், சத்துவகுணத்தாற் காண்பிக்கப்ப ட்ட, தனது ஸ்பூர்த்தி யபாவஞானரூபமான அஞ் ஞானத்தைத், தனது சுபாவமாகிய தாதான்மியத் தன்மையாற் சம்பந்தித்துத், தாதான்மியப்பட, அ த்திசையிற் றனதபாவத்தை, தாதான்மியமா ய டைந்த தன்னிற் பிரதிவிம்பித்த சைதந்நியமும், அ கங்கார நீங்கிய தனது ஸ்பூர்த்திக்கு முன்பான, த னது தாதான்மியத்துக்கு அவலம்பமாயுள்ள, தன ததிஷ்டான விருத்தியிற் பிரதிவிம்பித்த சைதந்நிய ம், அவ்விடத்திற் பிரகாசித்துநிற்கவும், அத்தாதா ன்மியதிசையிலுதித்த லயரூப தமோகுணத்தின் ஆதிக்கத்தா, லதிஷ்டான விருத்திப் பிரதிவிம்பித சைதந்நியமும், அதனைத் தாதான்மியமாயடைந்த அகந்தாவிருத்திப் பிரதிவிம்பித சைதந்நியமும், அ கந்தாவிருத்திக் கத்திசையிற், சத்துவத்தினுதவி தமசால் வாதிக்கப்பட்டு, அத்தமோகுணத்திற் பி ரதிவிம்பித்த சைதந்நியம் பிரகாசரூபமா யிருப்பி

னும், அஃதும் அவ்வுபாதிபெலத்தால் ஜடம்போ
லவே பிரகாசிக்கும். அங்ஙனம் பிரகாசிக்க, அவ்வு
பாதியையு மதின்மயமான தன்னையுந் தன்றோற் ற
னதின்மையாகக் கற்பிக்கப்பட்ட தனததிஷ்டான
விருத்தியையும், அபேதமாகக்கொண்டு, இஃததி
ஷ்டானம், இஃதிலயரூப தமோகுணம், எனப்பிரி
த்தறிய விவேகமற்று, லயரூப தமோகுணத்தின் ம
யக்கத்தான், மயங்கிநிற்கும். இதுவே யகங்கைதா
தான்மியப்படு மியல்பாம்.

இனியிஃதை யப்புறப்படுத்தும்விபரங்கூறுவோம்.
நீவிழித்திருக்குங்காற், சுழுத்திநிலையையடையாம
லடைந்து, பின்பு அதினின்றும் அகங்கையை யுதி
ப்பித்து, எங்ஙனம் கடபடாதிகளையிந்திரியசத்தை
யால் வியாபித்தநுபவிக்குங்காற் கடபடாதி நா
மரூபங்களோடுகூட வநுபவிக்கப்படுவது போல
வே, யவற்றிற்கு நான்குபாரிசங்களினு நாமரூபங்
களின்றி, நிராகாரமா யொரு வியாபகசைதந்நிய
ம், நிர்விஷயமா யநுபவிக்கப்பட்டு, அதிற் கடபடா
தி நாமரூபங்கள் காணப்படாததுபற்றிக் கடபடா
திகளின்மை கற்பிக்கப்பட்டு, அவ் வியாபகசைதந்
நியாநுபவமே, கற்பிக்கப்பட்ட அவ்வபாவ விருத்
தியிற் பிரதிவிம்பித்து, அவ்வபாவ விருத்தியையபா
பாவமாகப் பிரகாசிப்பிக்கக் காணப்படுகின்றதே, அதா;

அங்ஙனமே, அவ்வகங்கார விருத்திப்பிரதிவிம்பித சைதந்நியப்பிரகாச பெலத்தா லவ்வகந்தாவிருத்தி ஸ்புரித்துப் பிரகாசிக்க, அதனைப் பிரகாசிப்பிக்குஞ் சைதந்நியம் அதனிலுள்ளடங்கியதாகாமல், அவ்வகங்காரங் கடபடாதிகளைப் போல ஜடமாயுங் கண்டமாயு முள்ளவியல்பை யுடையதானதாற், கண்டமாகிய ஜடத்தைப் பிரகாசிப்பிக்குஞ்சைதந்நியம் அகண்டமானதால் அவ்வகண்டசைதந்நியம், அவ்வகந்தையி னுற்பத்திக்கு முன்னு முற்பத்திக்குப்பின்னு முற்பத்தி திசையினுமாகிய சகல பாரிசங்களிலுந், தெரிந்து வியாபித்தநுபவிப்பதினால், அங்ஙனம் வியாபித்தநுபவிக்க, இவ்வகந்தையுதித்ததுபற்றி யிவ்வகந்தையினநுபவமும், இவ்வகந்தை யுதியாததுபற்றி முந்தியவிடத்தி லிதினின்மையினநுபவமுங் காணப்படும்.

கடாபாவங் கற்பிக்கப்படவேண்டுமானாற் கடத்திற் கற்பிக்கப்படமாட்டாது. கடத்துக்குங் கடத்தினின்மைக்கு மாதாரமான பிருதிவியிற்றானே கற்பிக்கப்படும். இங்ஙனமாயின், உதித்தவிடத்தில் லிவ்வகந்தையி னிருப்பையு, முதிப்புக்கு முந்தினவிடத்தி லிவ்வகதையி னின்மையுங் கற்பிக்கப்படவேண்டுமானால், ஒரு ஆதாரத்தைப்பற்றிக் கற்பிக்கப்படவேண்டுமேயன்றி, நிராதாரமாய்க் கற்பிக்

கப்படமாட்டாது. என்றிங்ஙன மநுபவதிருஷ்டியி
னாலாலோசித்து, அவ்வகந்தா ஸ்பூர்த்தியையும், மூ
ந்தியதிசையி லவ்வகந்தை யின்மையாய்க் காணப்
படுவதா லதனின்மையையு, மநுபவதிருஷ்டியினு
னிதானித்து, அவ்வகந்தையினிருப்பையு, மதினி
ன்மையையும், எந்த ஆதாரத்தினிடமாகக் கற்பிக்
கப்பட்டுத் தோன்றுகின்றதெனப்பார்க்கில், இவ்
விரண்டுந் தங்களுக்காதாரமான பாவாபாவத்தோ
ற்றமற்ற சூந்யத்தைக் காரணமாகக் காண்பிக்கு நி
ற்கும். அங்ஙனம் பாவாபாவத்தோற்றமற்ற சூந்யா
நுபவத்தால் வியாபிக்கப்படில், அச்சூந்யமும் அவ
னைப்பிரகாசிப்பியாநின்ற அதிஷ்டானப் பிரகாச ச
த்தையையே, தனக்காதாரமாகக்காண்பிக்கு நிற்கு
மேயன்றி, நிரூபகாரமாயிராது. அங்ஙனம் பாவா
பாவத்தோற்றமற்ற சூந்யாநுபவமென்ன, அகங்கா
ர வின்மைத்தோற்றத்தி னநுபவமென்ன, அகங்கா
ரத்தோற்றத்தினநுபவமென்ன, இம்மூன்றும் முற்
கூறியபடி பின்னபின்னப்பிரகாரமாக, அணுமேருவி
வைபோல திருசியத்தின் பேதத்தையடைந்து, சா
க்கிரதிசையிற், பாவாபாவத் திருசியத்தோற்றங் கா
ஞக காணப்படாமற் றனக்கந்நியமாகக்காணப்படு
வதுபோல, சுழுத்திக்குப் போங்காலத்தும், அதி
னின்று விழிக்குங்காலத்தும், திருசியரூபத்தைய

டைந்த அகந்தை, அதனின்மை, இவ்விருதோற்ற
முமில்லாதசூனியம், இம்மூன்றுந்தானாகக்காணப்ப
டாமற் றனக்கந்நியமா யநுபவிக்கப்படும். ஆனால்
இம்மூன்றுதோற்றமும் அகங்காரத்தின்குணவிகா
ரமேயன்றி, இந்த மூன்றையும் பிரகாசிப்பித்த ஆ
ன்மசைதந்நியத்தின்விகாரமாகாது.

இதனை யநுபவத்திற் கூறுவாம். அகங்காரமூ
ன்றுகுணமுடையதானதால், அம்மூன்று குணத்
தையும் பிரித்துக்காணில், அவ்வகங்காரஞ் சொ
ரூபமற்று, ஆன்மசைதந்நியமாத்திரமாய், அகம்ப
தத்தினுண்மைப்பொருளாய்ச் சேஷித்து நிற்கும்.
அஃதெங்ஙனமெனில் தோற்றினதைத் தோன்று
மற்செய்தல், இலதை யுளதுபோற்றோன்றச்செய்
தல், தோற்றியதைப் பரிபாலித்தல் இம்மூன்றையு
ம், வெண்மை சிவப்பு கருப்பு இம்மூன்றையும், ஒ
ரு மிருத்கடத்திற் குணங்களாகக் கண்டு, அவற்
றைப்புத்தியினாற் பிரித்தெடுத்திடிற் குணங்களுக்
காதாரமான கடமுமழிந்து, அதிலாதேயங்களாய்
நின்ற குணங்களும் நிராதாரமா யழிந்து, அக்கு
ணங்களாயு மிருத்கடமாயும் பிரகாசித்த பிரகாச
மாத்திரமாய்ச் சேஷித்து, அநுபவத்துக்கு வருவ
துபோல்; இக்குணங்களுக்காதாரமாய்நின்ற அக
ங்காரமுமழிந்து, அதிலாதேயங்களாய்நின்ற அக்

குணங்களும் ஆதாரமின்றியழிந்து, ஆதார ஆதேயங்களாய் நின்ற அகங்காரம், அவற்றின் குணம், இவையாகப்பிரகாசித்தபிரகாசந்தானேயாகச் சேஷித்த பானமாத்திரமா யநுபவத்துக்கு வருமென்றருள:

மாணாக்கன்—அப்படியே,அவ்வகங்காரத்தின் வியாபாரபேதத்தால் பிரகாசிக்கப்பட்ட அம்மூன்று குணங்களையும்,ஒருகயற்றிலேறிய திரிதலைப்பிரித்தெடுக்கிறதுபோல,முத்தொழிலையு மதினின்று நீக்க,நிர்வியாபாரமானதாற் குணங்களுந்தாமே ஒழிய, அகங்காரமாகத்தோன்றுதல், இல்லாமன்மறைதல், அங்ஙனமாகப்பிரகாசித்தல்,இம்மூன்றுதன்மையுமிலதா யகந்தை நசிக்க,அவ்விதமேஆதாரமின்றிக்குணங்களும் நஷ்டமாக, அகங்காரமுங் குணங்களுமின்றிய பானமாத்திரமாகிய அநுபூதி,புராதனமான தனதுசொரூபமாயிருந்தும் நூதனம்போல நிரகங்காரமென்னு முபசாந்தபதவியில் முழுகிநின்று விஞ்ஞாபிக்கின்றான். பிராணநாதராகிய பரமகுருவே! நன்றாய்த்தெரிந்தேன். ஒருவனது நாமத்தையுங் குறிப்பையு மற்றொருவன் வேஷமாகப்பூண்டு மோகிப்பித்தல்போல,அகமெனும் நாமமு மகமெனப்பிரகாசித்தலுமான வேஷமாத்திரத்தால், இவ்வகந்தை ஆன்மவஸ்துப்போல மோகிப்

பித்தது. இப்போது விவேகித்து அநுபவமாய்ப் பார்க்கில், ஒருவிருக்ஷத்திற்றோன்றிய ப்ரமரசூசுபோலப் பொய்யாயிற்று. அப்படியே அகந்தையின் றிரோதானத்தால், அகண்டான்மஞானதிரோதானமாகிய அஞ்ஞானமும், அகந்தையாகப் பிரகாசித்த விபரீதஞானமும், இவ்விருதன்மையையுங்கூடத்தோற்றுமையான சூநிய ஞானமும், இல்லாதவையான இம்முக்குணங்களின் சாம்மியவைசம்மியங்களாற் றோற்றியதெனவும், இவையமித்தையேயெனவு மறிந்தேன்; ஆயினும் இவைகளின் வகந்தை, யுளதுபோற்றோன்றி, இல்லாத குணங்களால் ஸ்தூல சூக்குமங்களான விஷயங்களைக் கற்பித்து, அவற்றைச்சொந்தமாய்க் காண்பிக்குந்தன்மையெங்ஙனமெனை:

ஆசிரியர்—சுழுத்தியினின்றும் முக்குணங்களாலுதித்த அகந்தை, தான்மாத்திரமாய்த் தனித்து நிற்குங்கால், ஆன்மா அதிருசியனானதால் அதனைத் தாதான்மியப்பட வுபகாரப்படாமல் வாதிநிற்க, ரஜோகுணம் முன்னகங்காரத்தைத்தோற்றிப்பித்ததுபோல, அதிசூக்குமமான வாசனையினால் அவ்வகந்தையில் சப்தக்கிரகணசாமர்த்தியமுடைய சுரோத்திரமெனும் ஒருபிரஞ்ஞையாய்க் கற்பனைப்பட, அதனை அவ்வகந்தை ரஜோகுணத்தின்

முந்திய ஸ்தூலவாசனைசம்பந்தத்தைத் தாதான்மி யப்பட்டு, சஷ்க்குலிபோலுள்ள இரத்தமாமிசாதி களாலுண்டாகிய செவியையபிமானித்து, அதன் மத்தியிற்கேட்கும் வல்லமையுடைய சுரோத்திரே ந்திரியமாகப்பவிக்க, அதிற்பிரிதிவிம்பித்த சைதந்தி யப்பிரகாசம், அதற்குக்கேட்கும் வல்லமையாகப் பிரகாசித்துநின்றது. அப்படியே ரஜோகுணம் அ கந்தைக்கு அதிசூக்குமமான வாசனை விசேஷத்தா ல் ரூபக்கிரகணசாமர்த்தியமுடைய திருஷ்டியாக க்கற்பிக்கப்பட, அதனை ரஜோகுணத்தின் பூர்வவா சனைரூபமான, ஸ்தூலமாகிய இரத்தமாமிசாதி வி காரமாயுள்ள, புத்புத துல்லியமான நேத்திரங்க ளை யபிமானித்து, நான் பார்க்கிறேனெனப் பிரகா சிக்க, அதிற் பிரதிவிம்பித்த ஆன்மசைதந்நியப் பி ரகாசமும், அதறகுப்பார்க்கும் வல்லமையாகப் பி ரகாசித்துநின்றது. இப்படியே இருவகைத்தோற்ற ங்களான இந்திரியங்களும், ரஜோகுணத்தின் அதி சூக்குமமான வாசனையால் அகந்தையிலுதிக்க, அ வற்றைப் பூர்வம்போல் அகந்தை தாதான்மியப்ப ட, அதனிற்பிரதிவிம்பித்த ஆன்மசைதந்நியப் பிர காசமும், அததற்கு அவ்வவ்வல்லமையாகப்பிரகா சித்துநின்றது. அப்படியே ரஜோகுணத்தின்ஸ்தூ லவாசனையைமுன்னிட்டு, இந்திரிய கோளகங்களி

ற்ருதான்மியமுடைய அகந்தைக்கு, ரஜோகுணத்தின் சூக்குமவாசனு விசேஷத்தால் அகந்தையில் ரஜோகுணஞ் சப்த ஸ்பரிச ரூப ரசகெந்தாதிகளாகக்கற்பிக்கப்பட, அவை ஸ்தூலமாகக் கோளகத்துவாராபகிர்முகமாக விஷயீகரிக்கப்பட, அவற்றை அவ்வகந்தை இந்திரியகோளகங்களோடுங்கூடிய ஸ்தூலதேகத்தைவியாபித்து, அதனை தானென அபிமானித்ததுகொண்டு, புறம்பாகத் தோன்றிய அவ்விஷயங்களைத்தான் வியாபித்திருந்தும், அவற்றிற் சரீரேந்திரியகோளகக்குறிப்புக் காணப்படாததனுல், எனதுவிஷயமெனத் தாதான்மியப்பட, அவற்றிற் பிரதிவிம்பித்த ஆன்மசைதந்நியப்பிரகாசமும், அவற்றிற்கு அவ்வித வல்லமைகளாகப்பிரகாசித்துநின்றது. அப்படியே சொப்பனுவஸ்தையிலுமென அறியத்தக்கது.

மாணுக்கன்—ஐயா! ஞானேந்திரியங்கள் சத்துவகுணத்தின் விகாரங்களெனவுங் கர்மேந்திரியங்கள் ரஜோகுணத்தின்விகாரங்களெனவுஞ், சாஸ்திரங்களிற் காணப்பட்டிருக்க, இருவகை இந்திரியங்களையும், ரஜோகுணத்தின்வாசனு விகாரங்களென அருளியது எங்ஙனங்கூடுமென:

ஆசிரியர்—இருவகையிந்திரியங்களிலும் முக்குணங்களுமிருக்கின்றனவேயாயினும், இருவகை

யிந்திரியங்களாகக் கற்பிக்கப்பட்டதோற்றங்கள்மாத்திரம் ரஜோகுணத்தின் வாசனாமயங்களாகும். தோன்றினவைகளையந்தந்தத் தர்மங்களோடுங் கூடி வெவ்வேறாகப்பிரகாசிப்பித்தல், சத்துவகுணத்தின் வாசனாமயமானதாற் பிரதானமானதுபற்றி அவற்றைச் சத்துவத்தின் விகாரங்களாகக் கூறப்படும், அவ்விந்திரியங்களுக்கு, ஒவ்வொரு காலத்தி ற்றங்கள்தங்கள்வியாபாரஸ்பூர்த்தி திரோதானப்பட அநுபவத்துக்குவருவதால், நிரந்தரமாயில்லாததுபற்றி, அஃது அப்பி தானமாயினும் அவைகளிற்றமோகுணமுமுளதேயாகும்.

இங்ஙனமாயின் அகங்கையின் மூன்றுகுணங்களைப்பிரித்ததுபோல,அகங்கையிலுதித்த மூன்று குணங்களின் வெவ்வேறான சூக்கும வாசனைகளைப் பிரித்திடில், பீஜசக்தியிற் பிருதிவி ஜலாம்சங்களை புத்தியாற் பிரித்திடப், பீஜம் விருக்ஷ மென்ற விகாரமழிந்து, பீஜமாயும் விருக்ஷமாயும் பிரகாசித்த பீஜசக்தியான ஆன்மசைதந்நியப் பிரகாசமாத்திரமாகப் பிரகாசிப்பதுபோல; அக்குணங்களென்ன, அவற்றின்வாசனைகளென்ன, வாசனாமயங்களான ஸ்தூல சூக்கும மெனும்வகுப்புடைய தேகேந்திரியாதி விஷயங்களென்ன, இவையனைத்துமின்மையாகி, இவை யெல்லாமாய்ப் பிரகாசித்த

ஆன்மசைதந்நியப்பிரகாசமாத்திரமாகவநுபவிக்க
ப்படுமெனவுபதேசிக்க:

மாணுக்கன்—அப்படியே விஷயங்களையிந்திந்
திரியங்களிலடக்கி,அப்பகிரிந்திரியங்களின் வல்ல
மைகளை யவற்றை வியாபித்த அகந்தையோடுங்கு
ணங்களின் சூக்கும வாசன மாத்திரமாக வடக்கி,
அவ்வாசனைகளையும் அவற்றிற் காதாரமான குண
ங்களின் சலந விசேஷங்களிலடக்கி, அச்சலநங்க
ளையுந்தங்களுக்காதாரமான அக்குணங்களி லடக்
கிநிற்க,நிராகாரமாய் யாதொரு தோன்றிமறைத
லு மற்றசகஜமான திருக்கநுபவத்தைப், பூமியின்
கண்ணேயிருந்து சூரியமண்டலத்தை வியாபித்து
ப் பிரகாசியாநின்ற திருக்கநுபூதியில், ஊர்த்துவ
பாகத்திலுள்ள சூரியமண்டலமும் அதோ பாகத்
திலுள்ள திருஷ்டிகோளகமுங் கிரகிக்கப்படாவி
டில்,அவ்வநுபூதி எங்ஙனங் கிரகிக்கப்படுகிறதோ;
அங்ஙனமடைந்து அவ்வநுபூதியினின்றும்,வெண்
மைபொருந்திய ஒருபித்தியில் மற்றொரு நிறத்தை
யபூத்திடில் அந்நிறம் நீங்கி யிந்நிறமாகவே அநுப
வத்துக்குவருவதுபோலத்,திருசியமான முற்கூறி
ய யாவும், அந்தந்தத்தன்மையோடுங் கற்பனைப்ப
டிகண்ட நாமரூபத்தோடுங்கூடிய பிரகாசமாம் பி
த்தியிற் றனது அநுபவமாகக்கண்ட பஞ்சவன்னங்

களும், நெட்டை குட்டை சிறிது பெரிது நீளங்க னம் இவைகளுமின்றி, முன்னிலைப்படாமற் றானேக ப் பிரகாசிப்பிக்கும் ஞானுநுபவமெனும் ஆன்மா நுபூதியாம் நிறத்தாலமுழ்த்தி வியாபித்துப்பார்க்க, அந்நாமரூபங்கள் நீங்கிப் பானமாத்திரமாயகண் டமாய்ப் பிரகாசித்தபடி யநுபவித்து, அஞ்ஞானம் அகண்டப் பிரகாசாநுபூதி மாத்திரமான தன்னிட த்திற் காலத்திரயத்தினுஞ், சுத்தியி லிரசிதம்போ லப் பிரபஞ்சம் யாவுமில்லையெனத்தெளிந்து, நிர் ப்பயமெனும் பரமானந்தக்கடலாடிநின்றான்.

முற்றிற்று.

மூன்றாவதுபிரகரணம்.

பிரமேசஜீவஜகவிசேஷநிரூபணம்.

ஆசிரியர்—மாணாக்கனை யுச்சிமோந்தாலிங் கனம்பண்ணி நிஜானந்த வுல்லாச பரவசராகிக் கூறுவார். அகண்ட பரிபூரணான்மானந்த சுதாசமு த்திரத்தி லில்லாமற்கனைந்த பிரபஞ்ச கோலாகல முடைய நிர்ப்பயமென்னும் பெருமையடைந்த புருஷதெளரேய! கிருதார்த்தனாகினாய் இம்மஹா பாக்கியோதயம் மற்றயாவர்க்கு மரிதாகாதெனப் புகழ்ந்து பகிர்முகனுகச்செய்ய; மிகுந்தவணக்கத் துடன் வந்தித்து, கைகூப்பி வாய்பொத்தி விலகி

நின்ற அம்மாணாக்கனை நோக்கிச் சமுசயமின்றி,யுள்ளபடி பிரத்தியக்ஷபின்ன பிரமாநுபூதியையடைந்திருந்திடினும், யுக்தி விசேஷங்களா லவ்வநுபவத்தை யுல்லாசித்தநுபவிக்கவேண்டி விசாரிக்க விச்சையிருந்திடின் விசாரிக்கலாமெனவருள:

மாணாக்கன் — மேலான பிரியம்பொருந்தியபாக்தியுடனே யிவ்வித பெருமைபொருந்திய பிரமாநுபூதியை யடையுமார்க்கம் ஞானரூபமா யொன்றேயாயினும், ஞானசாதனமான வநுசந்தானமும் அதைப்பற்றிய மனனவிசேஷமும் வெகுபேதங்களாக விருக்கின்றமையால்,அதனை யேகதேசமாயினும் விரித்துபதேசிக்கவேண்டுமெனா:

ஆசிரியர்—பிரமம் ஈசன் ஜீவன் பிரபஞ்சம் எனநான்கு விதமாகச்சாஸ்திரங்களிற்கூறப்படும். அவையாவன— பிரமமாவது நித்திய நிர்விகார அசங்கோதாசீன அகண்டபரிபூரண சச்சிதானந்தவியல்பாய்ப் பிரகாசிக்கு நிர்க்குணசைதந்நியமாம். ஈசனாவது சர்வஞ்ஞ சர்வசம்பூரண சர்வகலியாணகுணாதார சர்வப்பிரபஞ்ச கர்த்தாவான சோபாதிக சைதந்நியமாம். ஜீவனாவது புண்ணிய பாப கர்ம வாசனமிச்ர கிஞ்சிஞ்ஞத்துவாதிகுணாதார பரதந்திர சோபாதிக சைதந்நியமாம். பிரபஞ்சமா

து விசித்திரதர அநேக நாமரூபபேத பின்ன ஜடாஜட குணாதார திருசியவஸ்துவாம். இத்திருசியமாகிய நாமரூபப் பிரபஞ்சந் திருசியமாகிய ஸ்தூலபஞ்சபூத பாஞ்சபௌதிக பேதக்குறிப்பை யுடையதாயின், அப்பகுதியை ஜடமெனவுஞ்; சூக்குமபஞ்சபூத பாஞ்சபௌதிக பேதக்குறிப்பை யுடையதாயின், அப்பகுதியை அஜடமெனவும்; இஜ்ஜடாஜடமான விருபகுதியு முதிக்கத்தக்க விடமாயும், ஒடுங்கத்தக்க விடமாயும், ஒடுங்குங்கால் பிரபஞ்சம் ஜீவன் ஈசன் பிரம மென்ற ஞானவுதிப்பின்றி மஹாசூநியம்போன்ற நிராகாரக் குறிப்பையுடையதாயின், அப்பகுதியை மாயை யெனவுங்கூறப்படும்.

இம்மாயையில், நிர்க்குணப் பரப்பிரம சைதந்நியம் பிரதிவிம்பிக்க மஹாசூநியம்போன்ற சர்வவியாபக நிராகாரமாக மறைந் திருந்த அம்மாயை, சைதந்நியத்தின் பிரகாச பெலங்கொண்டு அநாதிலக்ஷணமுடையதாகப் பிரகாசிக்கும். நித்திய கலியாணகுண சீலாளாகிய உத்தம நாயக ஞாயிகள் ஏகாந்தத்திற் சந்திக்க அவ்விருவருள்ளமும் பிரியமாத்திரமாய்த்தடித்து விந்துமாத்திரமா யுருகி நிற்பதுபோல; சிருட்டியாதியாம் முந்திய அரசாக்ஷியான நாயகனது சௌந்திரிய வடிவின் மயமான இரதிவிலாசம், பிரியமாய்த்தடித்து சமஸ்காரமா

ம் விந்துவாயுருகி நிற்கத், துருத்தியி லடைபட்ட காற்று அதினுட் பிரகாசிக்கின்ற சலநமற்ற ஆகாசம்போல சலநமின்றி நிராகாரமாகி அபேதமாய்க் காணப்பட்டபோதினுந், துருத்தியின் விம்முதலால் ஆகாசத்துக்கு வேறாகச் சலநதர்ம முடைய காற்றின் பேத மநுபவிக்கப் படுகிறதெப்படியோ, அப்படியே அப்பிரகிருதி புருஷ சந்நிதானத்தில் ஜநித்த அச்சமஸ்காரம், பிரகிருதிபுருஷாளை யபேதமாய்க்கலந்து நின்றபோதினும், அதிற் பிரதிவிம்பித்து விளங்கிய சைதந்நியப் பிரகாச பெலத்தால், பாணி பாத மத்தக ஆறுமுதலிய பரிணாம பேதத்துக்குக் காரணமாய் நின்ற கர்ப்பக் குறிப்பாக அநுபவிக்கப்படுகிறதுபோல, பிரபஞ்ச மாதாவாகிய பிரகிருதியி னுதரத்தில், இலக்கமிட அடங்காத வநேகபாணி பாத மத்தக ஆறுமுதலிய பரிணாம பேதத்துக்குக் காரணமாய்நின்ற பிரபஞ்சாகார கர்ப்பக்குறிப்பாக விளங்கிநிற்கும்.

அவ்வித பிரபஞ்சாகார கர்ப்பமாகப் பவித்த சமஸ்காரமானவிந்து, ஒரு குக்குடத்தின் விந்து கர்ப்பமாகத் தரிக்கப்படுங்காற் றன்னுளுண்டாகிய ஜந்துவி னுடலாயும், அதற் காவரணமான வண்டமாயும், எங்ஙனம் பவித்து நிற்பதோ; அங்ஙனமே விராட்புருடன் சரீரமாயும், அதற்காவரணமாகிய

ரூபஞ்ஞானமாகவும், ஜீவனது திருஷ்டியில் அஞ்ஞானமாகவுந், தோற்றிநிற்கும். ஆதலால்சிருஷ்டிமுதற் பிரளயம்வரையுள்ள சமஷ்டி ஜகத்துக்குங்காரணம் மாயையும், பந்தமுதன்மோக்ஷம்வரையுள்ள சாக்கிராதி ஜீவசிருஷ்டஜகத்துக்குக்காரணம் அஞ்ஞானமும் ஆகுமெனக்கூற:

மாணாக்கன்—ஆனால் அவ்வியக்தமாகிய ஒரு மாயாதத்துவந்தானே ஈசனது திருஷ்டியிற் சொரூபஞ்ஞானமாகவும் ஜீவனது திருஷ்டியில் அஞ்ஞானமாகவும் எங்ஙனமாகலாமென:

ஆசிரியர்—ஒருதாணுவே யொருவன் பார்வையில்விருக்ஷமாயும், மற்றொருவன் பார்வையிற் றுக்கஹேதுவான சோரனாயுங், காணப்படுவது போலாகலாமெனமொழிய:

மாணாக்கன்—பிரபஞ்சத்துக்குக்காரணம் யாதெனச்சங்கித்ததற்குமாயையெனவும், அம்மாயையும் ஈசஜீவர்களது திருஷ்டிபேதத்தால், சொரூபஞ்ஞானமாகவும் அஞ்ஞானமாகவும் ஆகலாமெனவும் அருளியபடிதெளிந்தேன். ஆனால், ஈசசிருஷ்டமாகவும் ஜீவசிருஷ்டமாகவும் இருவிதசிருஷ்டி கூறப்பட்டதில், ஈசனது சிருஷ்டிதான் சாஸ்திரங்களிற்பிரசித்தமாகக்காணப்படுகின்றது. ஜீவசிருஷ்டியெங்ஙனங்கூடும்? அவற்றின்பலன்களின்பேதம்

அத்தன்மையுடையதாகவிருக்கும்? என:

ஆசிரியர்—அவ்வியக்தமுதல் ஸ்தூலம்வரை ஜடாஜடங்களாகக் காணப்படும் இப்பிரபஞ்சமே பீசசிருஷ்டமெனப்படும். இஃதுஜீவர்களினிமித்த சுகமாகியபலத்தைக்கொடுப்பதாகும். ஆன்மா ஆன்மவிசாரணையின்றி அபிமானங்கொண்டு, அவற்றின்லாபாலாபங்களைப்பற்றிக்காமக்குரோதலோபமோஹ மதமாச்சரியமுதலியவைகளைப்பகிர்முகமாயும் அந்தர்முகமாயுங்கற்பித்து, அவ்வந்தர்முக வாசனையைச் சொப்பனமென்றும் பகிர்முகவாசனையைச் சாக்கிரமென்றும், இவ்விரண்டுவாசனையு நீங்கித் தனததிஷ்டானமாத்திரமாகவிருந்த ஞானசொரூபவான்மாவில், பகிர்முகமாகவிருத்தியுதிக்குஞ்சமயத்தில், வாசனைகளின் பீஜாகாரமானதமோவிருத்தி அவ்விடத்திற்றன்றைக் கற்பிக்கப்பட, அத்தமசு ஜடமானதுபற்றி அதனையும்பகுத்தறிய வல்லமையின்றிச், சொப்பிரகாசமான ஆன்மாவும், ஜடமாகிய வாசனாபீஜரூபதமசும், ஏகவஸ்துவாகக்குறிக்கப்பட, அப்பிராந்திக்குறிப்பினால் அதிஷ்டானமானதன்னிடத்திற் றெரியாமையெனும் அஞ்ஞானங்கற்பிக்கப்பட, அதனைச் சுழுத்தியவஸ்தையென்றுங், இவ்வவஸ்தாபேதங்களையுங் காமாதிகளையும் சிருஷ்டித்து, அவற்றின்பலமாகத்துக்க

றியசொர்க்காதிபலஹேதுவான அபூர்வமுமிருந்தி ருக்குநர்மத்திலடங்கிசாக்கிர சொப்பனவஸ்தைகளுக்குப்பேதத்தைக்கற்பிக்கவல்லமையற்று நீங்கிவிடும். ஆதலால்விவேகித்திடன் இத்துவைதப்பிரபஞ்சத்தையும்மனமாகிய தன்னையும் மித்தையென்றம்பச்செய்துநிற்கும். அப்படியே மிருத்திகை, மிருத்திகையில் பவித்த லோஷ்டம், இரத்தினம் இவ்விரண்டும் எத்தன்மையிலும் சமானமாயில்லாமற்பின்னபதார்த்தங்கள்போற்றோற்றிடினும் மிருந்ததெளிவுகொண்டு ரத்தினம் விவேகபுத்தியிற்பிரதிவிவகாரத்துக்கு வேறாக மாட்டாததுபோல், அஜடமாகி ஒருபாகமுந் திருசியப் பகுதியிலடங்கியதன்மவஸ்துவாகக்கொண்டு விவேகபுத்தியில்ஆன்மா இவைகளுக்கந்நியமெனத் தெரியுமாறஸ்புரித்துநிற்கும்.

அப்பிரகாரமே ஜீவர்கள் சற்குரு கிருபையாற்கிடைத்தவிவேகத்தாற்கர்மகாண்டத்திற்கூறியபுண்ணியபாவங்களைப்பொருந்திய அநேககோடி ஜநநமரணங்கள் ஜீவனைப்பொருந்தி யிருந்ததாகச் சொல்லுதில், அவஸ்தைகளைப்போல ஜநநமரணங்களும் நிலையின்றிவந்துபோனவையாயிருக்க, அவற்றைப்பொருந்திய ஜீவன் அவிநாசியாயும் அவற்றின்சம்பந்தவியோகங்களால் விகாரமின்றியவனு

யும் அவற்றிற்கு சாக்ஷியாயுமில்லாவிடி னிவனும
வைசனைப்போலொருவஸ்துவாகிக்கெடுவான். அ
ங்ஙனமாயின் அவைகளும்ஜீவனும் நித்தியமல்நீ
ங்கிவிடும். அஃதோ சுருதியுக்தி யநுபவமூன்றுக்
குமொவ்வாது. அந்நிமித்தம் அவைமுற்கூறிய
பிரகாரமொப்பிடின் ஆகாயத்திற் பெய்கின்ற வ
ருஷத்தாலும் தகிக்கின்ற சூரியகிரணதாபத்தாலு
மெங்ஙனமாகாசத்திற்கு சீதோஷ்ண சம்பந்தங்கி
டையாதோ, அங்ஙனமேயிவ்வாத்மாவுக்குமுற்கூ
றிய சம்பந்தங்கிடையாது. தோற்றுகிறதேயெனி
ல் அளவில்லாதபிரவாகம்போற்காணப்படினும் ம
ருமீசிகாப்பிரவாகத்தால் பூமியெங்ஙனம்நனையா
தோ, அங்ஙனமேயிவைகளின்சம்பந்தம் ஆன்மாவு
க்குக்கிடையாது. இங்ஙனமாலோசிக்கின் ஜநநமர
ணங்கள்நீங்கிமோக்ஷமார்க்கம்ஜீவர்கட்கு வெளி
ப்படும்.

அப்படியேயகளாயின்றிய சமுத்திரம் காற்றின்
சலனவிசேஷத்தால் அலை நுரை குமிழி முதலிய
வைகளால் விகாரம்பொருந்தினதாகவும் அஃதுநீ
ங்கினவிடம் நிர்விகாரமாகவுங்காணப்படினும், ஜ
லம்ஜலமாகவேயிருந்திருப்பதுபோல, விசேஷபாம
விசேஷபந்தினீக்கம் சாக்ஷிசைதந்நியத்துக்குக் கி
டையாதெனவாலோசிக்கின் நீங்கிவிடும். காலத

திலுதிக்கும்படியுபதேசிக்கவேண்டுமெனப்பிரார்த்திக்க:

ஆசிரியர்—பிரத்தியக பின்ன பரமாத்மஸ்வரூபமாகிய தனக்குப் பின்னமில்லாத சகுணநிர்க்குணரூபியாய்ப்பிரகாசிக்கின்ற திவ்வியமங்கள நரசிம்ஹ சுதாசிந்துவில்மூழ்கி நிஜானந்தபரவசராய்அருளுவார். * நிருஎ—து வியாபகம் ஸிம் எ—துபெந்தம். ஹ எ—து ஹனனம்—கெடுத்தல். எனப்படும். இம்மூன்றுபொருளையுஞ் சேர்க்கில் சர்வவியாபகனாகிய சர்வபந்தஹரன் எனப்படும். பிரதிபந்தங்களாகிய எச்சத்துருக்களும் எதிரிட்டுநோக்கத்தகாத உக்கிரகுணவிருத்தியையும் அங்ஙனமே எதிரிடின் அதஞ்செய்யாநின்ற வீரகுணவிருத்தியையும், திரிவிதபரிச்சேத சூந்ய வியாபககுணவிருத்தியையும், எக்காலத்தும் மற்றோர் உதவியில்லாத சொப்பிரகாசகுணவிருத்தியையும், கடபடாதிபிரபஞ்ச சத்தாபேதங்களைத்தனது சத்தையால் வாதிப்பதான ஆன்மசத்தையை எவ்விடத்துமுளதாகச்செய்யத்தக்க குணவிருத்தியையும், தனது வியாபகத்தால் சாதகனது பெந்தமனைத்தையும் ஹரிக்காநின்றகுணவிருத்தியையும், பிரதிப

* நிரு-என்னும்வடமொழி தமிழில்-நரஎன மரீஇயது.

ந்தங்களான எச்சத்துருக்களும் முன்னிலைகொள்
ளப்படத்தக்ககுணவிருத்தியையும், எக்கால
த்தும் தனதியல்பால் சாதகர்களுளத்தில் மேலா
ன மங்கள சுபாவமுடைய நிஜாநந்தகுண விருத்
தியையும் யாவரையும் வதைக்கநின்ற பிரமாத
மெனும் மிருத்துவைவதைக்கத்தக்ககுணவிருத்தி
யையும், பிரத்தியகபின்னபரமான்ம சொரூபமாகி
ய ஐக்கியகுணவிருத்தியையும், அபரோக்ஷமாகிய
பிரத்தியக்கேகரஸமாம் அகமர்த்த சொரூபகுண
விருத்தியையும், பொருந்திய உக்கிராதிநாமபேத
ங்களையுடையநான்குபாதங்களால் பிரகாசிக்கின்ற
தாகியும் முப்பத்திரண்டுவர்ணங்களால் அவ்வில
க்கமுடைய அம்சமூர்த்திகளை நிரூபிக்கின்றதாயு
முள்ள ஆநுஷ்டுவமென்னும் மந்திரராஜத்தால்,
மூன்றுபாதங்கொண்டு மூவாவரணரூபமான மூ
ன்றவஸ்தைகளும் ஒருபாதத்தால் அவஸ்தாதீதது
ரியகூடஸ்தசிவசைதந்நியமும், அதில் சகுணநிர்க்
குணவிஷயமான வுபாசனைவிவேகவிருத்தியநுபூ
திவிவைகளால்லபிக்குமாறு உபதேசித்தபடி யநு
பூதியையடைந்து, ததுல்லாசவிலாசியாய்ப் பவிப்
பாயென்றருள: மாணாக்கனும் அப்படியே அந்நிரு
கேசரிவித்தியானந்தரசாயனத்தில் முழுகிக்கிருதா
ர்த்தனானான்.

அங்ஙனம் உள்ளமாணுக்கனைக் கருணையால்
நோக்கிக் கிஞ்சித் ரகசியமருளுவார். இங்ஙனம் ம
ஹும் வைஷ்ணவமாகப் பிரசித்தமாயிருந்திடினும்
இவ்வாறு சிவசின்னந்தரித்திருக்கக்காணமேதெ
னநோக்கின், பரமபக்தராகிய பிரஹலாதருக்கா
கஅவர் பிதாவைச்சங்கரிக்கவேண்டி ஸ்தம்பத்தி
ல்நின்றும் அவதரித்தவோர்பாகங்கொண்டு, நார
ஸாதுதசாவதாரத்துக்குட்பட்டிருந்திடினும், வே
சிரத்தில் ஜீவப்பிரம ஐக்கியத்தை யுபதேசிக்கவு
தமஹாவாக்கியத்தின்மூன்றுபதங்களின் ஒருபத
ம் ஜகத்காரணவஸ்துவைப் பொருளாயுடையதா
கி, சதாசிவனையதிஷ்டானதேவதையாகப்பொரு
ந்தினதாகியும், ஒருபதம் பிரத்தியகபின்ன அத்து
விதீயபிரமவஸ்துவைப் பொருளாகவுடையதாகியு
ம்சிவசக்தி ஐக்கியமாகியபரமேசுரனையதிஷ்டான
தேவதையாகவுடையதாகியும், இவ்வித்தையாலு
பதேசிக்கப்பட்ட நரஸிம்ஹர் அவ்வத்துவிதீயபி
ரமசக்தியாகநிரூபிக்கப்பட்டு அதனையபொருந்தி
யுவராகியும் காணப்படுவதாலும், அப்படியேஸ்மி
ருதியிலும் பிரதோஷசமையத்தில் ஹரியின் சே
வையின்நிமித்தம் செல்லலாகாதெனவும், அங்ஙனே
ஞ்செல்லினும் நரஸிம்ஹ இராமச்சந்திரமூர்த்து
ங்களின் விஷயமாயிற் குற்றமல்லவென்றுங் கூற

ப்படுவதாலுஞ் சாக்ஷாத்பரசிவமே இந்நாவிம்யமென மாணாக்கன் அங்ஙனமேதெளிந்து அத்தியாநானந்தபரவசனானான்.

முற்றிற்று.

இரண்டாவது இராமச்சந்திரவுபாஸ்தி

மாணாக்கன்—விழித்து இராமச்சந்திரவுபாஸ்தியையும்இங்ஙனமேயநுக்கிரகிக்கவேண்டுமெனப்பிரார்த்திக்க ஆசிரியர் அருளுவார்.

நீலமேகசியாமளராகியும் கடகமகுடாதி திவ்யாபரணபூஷிதராகியும் பீதாம்பரதாரியாகியுங் கர்ணாந்த விஸ்ராந்தலோசன பங்கேருகராகியும் ஆஜாநுலம்பிபாகுத்துவயராகியும் கவாமாங்காரூடஜாநகியராகியும் பரதலக்ஷ்மண சத்துருக்னசமேதராகியும்சின்முத்திராங்கிதகரகமலராகியும் இராவணசம்ஹாரநிமித்தம் சின்மய மஹாவிஷ்ணுவின்அவதாரமாகியுமுள்ள தசரதான்மஜ ராமச்சந்திரதிவ்வியமங்களமூர்த்தியை, தஹரமெனுந் தேவர்வாசபூவாகிய அயோத்தியிற் பாவித்து அத்தியாநானந்தத்தில்முழுகிப், பின்பு இவ்விலக்கணம்பொருந்திய இராமச்சந்திரமூர்த்தியைப் பிரணவார்த்தமாகஅறிந்து அநுபவிக்கவேண்டும். அதெங்ஙனமெனில் இலக்ஷ்மணமூர்த்தியை அகர